REGD. No. M. 6311

PHONE No. 55630

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 266

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: சித்திரை 10உ வியாழன் (22—4—54) ★ ★ ★ வெளியூர்: சித்திரை 11உ வெள்ளி (23—4—54)

# கல்வி மானியம்: டெல்லி கைவிரிப்பு!

## ஏழு மாநிலங்களுக்கு உதவும்போது திருவாங்கூர்-கொச்சிக்கு மறுப்பு ஏன்?

## ஆசிரியர் கோரிக்கைகளை எப்படி தருவது?

### திரு—கொச்சி அரசாங்க அமைச்சர் அழுகுரல்

எர்ணாகுளம், ஏப். 21—

இந்தியத் துணைக் கண்டத்திலேயே கற்றவர் தொகை கூடுதலாக உள்ளது திருவாங்கூர்—கொச்சி மாநிலத்தில் தான். அந்த அரசாங்கம் கல்வி மானியம் தரவேண்டும் என மத்திய அரசாங்கத்தைக் கோரி இருந்தது. அக்கோரிக்கையை அலட்சியப்படுத்திவிட்டது யூனியன் அரசாங்கம் இந்த உண்மையை நிதி அமைச்சர் நடராஜன் (பிள்ளை) அறிவித்துள்ளார்.

சம்பள உயர்வுக்காக ஆசிரியர்கள் கிளர்ச்சி செய்து வருவதைத் தாம் அறிந்திருப்பதாகவும், உதவி செய்ய யூனியன் அரசாங்கம் மறுத்துவிட்டதை தாம் மறந்துவிடுவதற்கில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

குறைந்தபட்சம் 50 லட்ச ரூபாயாவது இனாமாக உதவ யூனியன் அரசாங்கம் முன்வந்தால் அல்லாது, ஆசிரியர்களின் கோரிக்கைகளை தி. கொ. அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாது எனவும்; மொத்த வருமானத்தில் 25 சதவிகிதத்தை தி. கொ. கல்விக்காக செலவழித்து வருகிறது எனவும் அமைச்சர் நிலைமையை விளக்கினார்.

### ரஷ்ய இராணுவச்செலவு குறைப்பு

ரஷ்யாவின் இராணுவச் செலவில், சென்ற ஆண்டைவிட, இவ்வாண்டில் 1,240 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது.

### சென்னை மேல் சபை

சென்னை மேல் (சட்ட) சபையின் அடுத்த கூட்டம், மே மாதம் 10-ம் தேதி ஆரம்பமாகும்.

## ஐரோப்பியப் பாதிரியார் சுடப்பட்டார்

### மலேயா கொள்ளையர் அட்டூழியம்

பெனாங், ஏப். 21—

மலேயா கொள்ளையர்கள் முதல் முதலாக இப்பொழுது தான் ஐரோப்பிய கிறிஸ்துவப் பாதிரிகளைச் சுட முயன்றுள்ளனர். பெனாங் அருகில் உள்ள குன்றுகளில் இருக்கும் செய்ண்ட் சேவியர் ஓய்வு மாளிகையில் புகுந்து அரை மணி நேரம் கொள்ளையினர் அட்டகாசம் புரிந்தனர்.

பாதர் சைம்மோரியின் என்ற 63 வயதுடைய ஐரோப்பிய பாதிரி உயிர் தப்ப மண்ணி படுக்கை அறைக்கு ஓடினார்; கொள்ளையர் அவரை விடாது தொடர்ந்து சென்று, அடி வயிற்றில் சுட்டுவிட்டனர்.

அரை மணி நேரம் மாளிகையைச் சோதனையிட்டு, அங்கு கிடைத்த மூன்று துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு, கொள்ளையர் வெளியேறி விட்டனர்.

### மக்கள் தலைவர்கள் நாடு கடத்தப்படுவர்!

காரைக்கால், ஏப். 21—

போலீஸ் தடையை மீறியதாகவும், அதிகாரிக்குக் காயம் விளைவித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்ட தோழர் ஷேக் மதார் சாயபு மரைக்காயருக்கும், எம். நாகராஜனுக்கும் பிரெஞ்சிந்திய கோர்ட்டு தலா 3 மாதக் கடுங்காவல் தண்டனையும், 100 பிராங்கு அபராதமும் விதித்ததுடன், சிறைத் தண்டனைக்குப் பிறகு அவ்விருவரையும் 2 ஆண்டு காலத்திற்குப் பிரெஞ்சிந்தியாவிலிருந்து நாடு கடத்தும்படியும் உத்திரவிட்டது.

### கல்வி இலாகா டைரக்டர்

#### பழைய அதிகாரி மீண்டும் நியமனம்

சென்னை, ஏப். 22—

சென்னை சர்க்காரின் தற்போதைய கல்வி இலாகா டைரக்டர் திருமதி ஓ. சி. சீனிவாசன் பதவியிலிருந்து விலகுவதால், ஆந்திராவிலிருந்து சென்னை சர்க்கார் சேவைக்கு வந்துள்ள திரு. எஸ். கோவிந்தராஜுலு நாயுடு, அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆந்திர பிரிவினையாவதற்கு முன், அவர். சென்னை சர்க்காரின் கல்வி இலாகா டைரக்டராக சேவை செய்தார்; ஆந்திர மாநிலம் அமைந்தவுடன் ஆந்திர சர்க்காரில் அவர் சேவை செய்தார்.

## ஏ. ஒய். அருளானந்தசாமி (நாடார்) மறைவு

முத்தமிழ் வள்ளல் ராவ்பகதூர் ஏ. ஒய். அருளானந்தசாமி (நாடார்) அவர்கள், தஞ்சை பூக்காரத் தெருவில் உள்ள தனது மாளிகையில், புதன்கிழமை இரவு இயற்கை எய்தினர் என்ற செய்தியை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

கரந்தைத் தமிழ் சங்கத்தின் தலைவராக இருந்து சங்க வளர்ச்சிக்கு ஆவன செய்துள்ளார். இயற்கை எய்திய நாளிலும்கூட, தமிழ் சங்கத்தின் கூட்டத்திற்குச் சென்றுவிட்டே, இரவு இல்லத்திற்குத் திரும்பினர்.

மாளிகைக்குத் திரும்பியதும் இருதய வலி ஏற்பட்டது. உடன், சிறந்த மருத்துவ சிகிச்சை தரப்பட்டது தரப்பட்டும், இயற்கை வெற்றி பெற்றது.

அவருக்கு வயது 58-தான் ஆகிறது. அவர், பல பொதுநல சங்கங்களில் பங்கு கொண்டிருந்தவர்.

அவர் கிறித்துவ சமயத்தைச் சார்ந்தவராக இருந்தும், அவர் கோணட அச்சமய எல்லைக்குள் கட்டுப்பட்டுக் கிடந்ததில்லை.

அவருடைய உடன்தோன்றல் ஏ. ஒய். எஸ். பரிசுத்த(நாடார்) அவர்களாவர். அவருக்கு இரண்டு பிள்ளைகளும், பெண்களும் உண்டு. அவர் பிரிவாற்றாமல் அல்லல்படும் அளவற்ற நண்பர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த துக்கத்தை அறிவித்துக்கொள்ளுகிறோம். (ஆ-ர்)

## ஐந்தாண்டு திட்டத்தில் துண்டுவிழும் தொகை ரூ. 521 கோடி

### வெளிநாட்டார் ரூ.232 கோடிவரை உதவியுள்ளனர்

புதுடில்லி, ஏப். 21—

ஐந்தாண்டு திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற, இதுவரை செலவழித்தது போக, மேலும் ரூ. 521 கோடி தேவைப்படுகிறது.

வெளிநாட்டு உதவி, வேறு புது வரிகள், கடன் எழுப்புதல், அல்லது துண்டுவிழும் வரவு – செலவு திட்டத்தை உருவாக்கல் ஆகியவை மூலம் தான், இப்பெரும் தொகையைச் சரிகட்ட முடியும்.

இதுவரையில் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டுள்ள தொகையில் வெளிநாட்டார் உதவி ரூ. 232 கோடி வரையில் கிடைத்துள்ளது.

இதுவரை கிடைத்துள்ள உதவியின் விவரம் வருமாறு:—

உலக பாங்கியிலிருந்து பெற்றுள்ள கடன் ரூ. 33 கோடி;

கொழும்பு திட்டத்தின் மூலமாகக் கிடைத்த உதவி ரூ 26 கோடி;

கோதுமை கடன் வகையில் கிடைத்தது ரூ. 90 கோடி;

அமெரிக்காவின் உதவித் தொகை ரூ. 80 கோடி;

போர்ட் தர்ம நிலையத்தின் உதவி ரூ. 2 கோடி;

## 'விசால ஆந்திரா' கோரி 21 சட்ட சபை உறுப்பினர் மனு

### மாநில திருத்தக் குழுவிடம் கொடுக்கப்பட்டுள்ளது

ஐதராபாத், ஏப். 21—

ஐதராபாத் மாநிலத்தில் உள்ள ஆந்திரப் பகுதியின் சட்ட சபைப் பிரதிநிதிகளாக உள்ள 21 காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்கள், ஐதராபாத் நகரைத் தலைநகராகக் கொண்டு, ஆந்திர மொழிப் பகுதிகளை 'விசால ஆந்திரா'வாகத் திருத்தி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை மனுவை, மாநிலத் திருத்தக் குழுவிடம் கொடுத்துள்ளனர்.

ஐதராபாத் மாநில அமைப்பு, கால உணர்விற்கு ஒத்ததாக இருக்கவில்லை எனவும், தென்னிந்தியாவை மொழிவழியில் பிரித்தமைக்க வேண்டியதற்கு ஐதராபாத்தைப் பிளவுபடுத்த வேண்டியது மிகமிக இன்றியமையாதது எனவும், அம்மனுவில் காணப்பட்டுள்ளது.

சரித்திரம், பொருளாதாரம் அரசியல் ஆகிய துறைகளின்படி, ஐதராபாத் வெறும் செயற்கை ஏற்பாடேயாகும் எனவும், விசால ஆந்திர கோரிக்கைக்கு காங்கிரசின் ஆசீர்வாத பலமும், காங்கிரஸ் ஒப்புதலும் உள்ளன எனவும், அம்மனுவில் கூறப்பட்டுள்ளன.

## 'கல்லாமை—அறியாமையில் 80 சத மக்கள் உள்ளனர்'

### 'மாநிலக் கண் கொண்டுதான் கடலூரை காண முடியும்'

கடலூர், ஏப். 21—

"ஏதாவது செய்வதாக வாக்களிப்பதற்கு முன்னதாக, தனது அந்தக் காலத்து நகராட்சி தலைவர் பதவியிலும், இதுகாலை தான் பெற்றுள்ள பதவி மாறுபட்டுள்ளதாகும் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். மாநிலக் கண்கொண்டு காணாமல், குறிப்பிட்ட ஒரு நகர மன்றத்திற்காக மட்டும் சிறப்பாக ஒன்றும் செய்ய முடியாது. என்னிடமிருந்து ஒன்றும் அதிகமாக எதிர்பார்க்காதிருக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்."

மேற்குறித்தவாறு, புதிதாகக் காங்கிரஸ் கட்சியில் கலந்து ஸ்தல ஸ்தாபன அமைச்சர் பதவி பெற்றுள்ள உழைப்பாளர் கட்சித் தலைவர் எஸ். எஸ். இராமசாமியார், கடலூர் நகர மன்ற வரவேற்பில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"80 சத மக்கள் வறுமையில் உழன்று கொண்டு இருக்கின்றனர். அறியாமையிலும், கல்லாமையிலும் அவர்கள் கட்டுண்டு கிடக்கின்றனர். பெரும் இன்னல்களை அவர்கள் அனுபவிப்பவர்களாக இருந்தபோதிலும், அரசாங்கத்தை அணுகி அவ்விடுக்கண்களைக் கூற அவர்களுக்கு ஆற்றல் இல்லை."

நம் நாடு
திமுக தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 22—4—54 வியாழன்

# பதவிநாதன் அருள்!

பதட்டமாகப் பேசுவதில் பெயர் பெற்றவர் பண்டித ஜவகர். செல்வச் செருக்கு, இளமையிலிருந்தே அவரிடம் நாவடக்கத்தைத் தோன்ற விடாமல் தடுத்துவிட்டது. கட்டாகப் போராடிய விடுதலைப் படையினர், இடம், பொருள், ஏவல் கருதி, பண்டிதரின் பதட்டத்தைத் தட்டிக் கேட்காமல் இருந்துவிட்டனர். அவர்கள், அக்காலத்தில் இயற்றிய தவறு, இக்காலத்தில் பண்டிதரைச் சொல்லிழுக்குப்படத் துணை நிற்கிறது.

பாகிஸ்தான் கோரிக்கைக் கிளம்பிய காலை, கொஞ்சம் தன்னடக்கத்தோடு பேச, பண்டிதரின் நாக்குப் பழக்கப் பட்டு இருந்தால், அவர் ஆரம்ப காலத்தில் கூறியது போலவே அக்கோரிக்கை பகற்கனவாகப் போயிருந்தாலும் போயிருக்கக்கூடும். அவர் கொக்கரிப்பின் விலை, பாகிஸ்தான்! சென்ற கால சம்பவங்கள் இந்த உண்மையைத்தான் வலியுறுத்துகிறது.

தனது பரம்பரைப் பண்பு பட்டுவிடாத முறையில், திராவிடர் இயக்கத் தலைவர்களைக் குறித்து, கனியிருக்கக் காய் கவரும் மேதையோல், தில்லையில் கூடிய காங்கிரஸ் ஊழியர் சிறப்புக் கூட்டத்தில், வசவுத் தீயை உமிழ்ந்திருக்கிறார், தனது இரைச்சலை நிர்வளிக குண்டென மதித்துக் கொண்டு! திராவிட நாடு கேட்பதற்காகத் திராவிட இயக்கத் தலைவர்கள் பயித்தியக்கார விடுதியில் இருக்க வேண்டியவர்கள் என, கோபமும் சிரிப்பும் கூட்டிக் கொட்டி அளந்திருக்கிறார்.

'தலைவர்களின் தனி நாடு கோரிக்கைப் பேச்சில் அறியாமையும், பைத்தியமும், அவைகளின் எல்லைக்கோட்டில் வந்து நிற்கின்றன' என்கிறார் டெல்லி ஆதிபத்தியத்தின் பாதுகாவலராம் பண்டிதர்! தலைவர்கள் பேச்சு தீமை பயப்பது எனவும் அபாய சங்கு ஊதுகிறார், அலகாபாத் சீமான்!

இப்பிளவுபடுத்தும் சக்திகள் அனைத்தின்பாலும் ஒருவர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தாபமும், சாபமும் சேர்த்துத் தருகிறார் காஷ்மீர் கனவான். சாதாரண குடிமகனாக இருக்கும் நேரத்திலேயே, நாத் தழும்பேறப் பேசிப் பழகிவிட்டவர், பதவியிலிருக்கும் நேரத்தில, முன்னிலும் கூடுதலாகப் பேசுவதுதானே பதவியின் இலட்சணம்? மாற்றுக் கருத்தினரிடம், மதிப்பு வைத்துப் பேசலாமா, இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமராக உள்ள ஒருவர்? அவ்வாறு பேசுவது, அவர் பதவிக்கு இழுக்கை அல்லவா கொடுத்துவிடும்?

உலக வரலாறு கற்றவர் பண்டிதர்! சிலநூல் தெரிந்தவர் ஜவகர்! உள நூல் பயின்றவர் நேரு! இன நூல், மொழி நூல், இன்னோரன்ன நூற்கள் பலவும் மோதிலால் திருமகனார் தெரிந்துதான் இருக்கிறார்; இருந்தால என்ன? அவர் கற்ற வித்தை அனைத்தும், பாகிஸ்தான் கோரிக்கையின் நியாயத்தை, அவருக்கு அறிவுறுத்தத் தவறிவிட்டுத் தானே இருக்கிறது? அதுபோலத்தானே, திராவிடர் கோரிக்கையின் நியாயத்தையும், அவர் இப்பொழுது காணத் தவறுவார்? நாள் செல்ல வேண்டும், திராவிட இன மக்களின் லட்சியத்தை, நேரு பண்டிதர் உணர்ந்து கொள்வதற்கு!

திராவிட இயக்கத் தலைவர்கள், இன்னமும் பயித்தியக்கார விடுதியில் இல்லாமல் இருப்பதற்குப் பண்டிதர் ஆச்சரியப்படுகிறார். இன்றுள்ள உலக நடைமுறையையும், இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர் என்ற முறையில் தாம் ஆடும் அரசியல் கூத்தையும் பண்டிதர் எண்ணிப் பார்த்தால், தாம் ஏன் இன்னமும் பயித்தியக்கார விடுதியில் இல்லாமல் இருக்கிறோம் என அவரே ஆச்சரியப்படுவார். தமது போக்கிற்காக அவர் ஆச்சரியப்பட்டாலும் படாமற்போனாலும், அறிவுலகம் பேராச்சரியம் கொள்ளத்தான் செய்யும் என்பது உறுதியிலும் உறுதியாகும்.

இன்றுள்ள உலகப் போக்கில், பெரும் பெரும் இயந்திரத் தொழில் சாதனங்கள் எந்த நாட்டினிடம் உள்ளனவோ, அதுதான் உலகத்தை இயக்கும் வாய்ப்பையும் சக்தியையும் பெற்றுள்ள நாடாக உள்ளது என்பது மிகையன்று. நாம் காணும் பிரத்தியட்ச உண்மை இதுதான். விஞ்ஞானமோ மார்க்சிய தத்துவமோ, இந்த வாய்ப்பை உண்டாக்கிவிடவில்லை. எனவே, கண்ணன் காட்டிய பாதக வழி ஒன்றைத் தவிர உடைத்தாயில்லாத இந்தியத் துணைக் கண்டத்துப் பிரதமர் பண்டிதர், உலக அரசியல் வானில் சஞ்சரிக்கப் பார்ப்பது வெறும் வடிகட்டினப் பயித்தியக்காரத்தனமாகும்.

சென்ற பெரும் போருக்கு முன் வரை, பெரும் பெரும் இயந்திரத் தொழில் சாதனங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த பிரிட்டன், இப்பொழுதும் அதே வசதியுடன் வாழ்ந்து வரும் பிரிட்டன்; அரசியல் அறிவும், ஆளும் திறமும், எடுத்த துறையிலும், பயிற்சித் துறையிலும் கற்று நடாளத் தெரிந்துள்ள நல்லறிவாளர்கள் பலரையும் பெற்றுள்ள பிரிட்டன், மக்களாட்சி முறையின் மாட்சிமை காக்க மன திடம் வாய்ந்த பெருமக்களையும் பெற்றுள்ள பிரிட்டன், இன்று அமெரிக்காவின் எடுபிடியாகக் கட்டுண்டு கிடக்கும் கொடுமையைக் கண்டு வருகிறோம். தொழில் முன்னேற்றங் காண அமெரிக்காவிற்கு ஒரு நூற்றாண்டு பிடித்ததென்றால், அதில் பாதி முடிவதற்குள் தொழில் வளத்தில் முன்னேறிய மிகச் சிறு ஜப்பான் நாடும், இன்று அமெரிக்காவின் ஆணை வழி ஆடிக் கிடக்கிறது.

அமெரிக்காவின் போக்கும், பிரிட்டனும், ஜப்பானும் ஆட்பட்டுக் கிடப்பதும் அவசியமா? நியாயமா? என்பது பற்றின ஆராய்ச்சியில் நாம் இப்பொழுது இறங்கப்போவதில்லை; நமது விளக்கத்திற்கு, இப்பொழுது அந்த ஆராய்ச்சிக்குத் தேவையுமில்லை.

வட அட்லாண்டிக் ஒப்பந்தக் குழுவில் தானும் இணைந்து கொள்ளத் தயார் என, அரசியல் பிரச்சார குண்டை சோவியத் ரஷ்யா சில நாளைக்கு முன் அமெரிக்கா மீது வீசி எறிந்தது. அந்தக் கூட்டில் சேர்ந்துள்ள பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளைக் கலந்துகொள்ளாமலே, சோவியத் கோரிக்கைக்கு எதிர்ப்புக் கூறிவிட்டது வெளிப்படையாக அமெரிக்கா. அமெரிக்காவின் இவ்வெதேச்சாதிகாரப் போக்கிற்கு, பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் பெரும் புயல் வீசிற்று. பதில் கூறும் வகையில் சர்ச்சில் துரையும் திணறிப் போனார்.

வல்லரசுகளின் அரசியல் சூதாட்டம் இந்த லட்சணத்தில் உள்ளது. பண்டிதரின் பதட்டமானப் பேச்சு இச்சூதாட்டத்திற்குத் தகுதியற்றது—தேவையற்றது—செல்லுபடியாகாதது!

உலக சமாதானத்தில் அக்கறை கொண்டிருப்பவர் பண்டிதர் என்பது உண்மையானால், காஷ்மீர் சிக்கலுக்குப் பரிகாரம் தேடிவிட்டு, பிறகு கூறட்டும் உலகில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கான அறிவுரைகளை என, பண்டிதரைப் பார்த்து சர்ச்சில் கேட்டால், ஐசனோவர் வினவினால், பண்டிதர் என்ன பதில் சொல்லுவார், இன்னமும் தாம் பயித்தியக்கார விடுதிக்குக் குடியேறவில்லையே என ஏக்கங் கொள்வதைத் தவிர்த்து?

சொந்த விஷயத்தில் முடிவு காண பிறர் தயவிற்குக் காத்துக் கிடக்கும் கனவான, ஊருக்கு, உலக வல்லரசுகளுக்கு அறிவுரைக் கூறித்திரிவது, தமது அறியாமையின் எல்லைக்கோடு எனக் கொள்ளவில்லை! தனது அறிவுக் குழப்பத்தின் கலங்கரை விளக்கம் என்பதையும் உணர்ந்து கொள்ளவில்லை!

ஆனால், திராவிட இயக்கத் தலைவர்களின் நியாயமான திராவிட நாடு கோரிக்கை மட்டும் அறியாமையின்பாற்பட்டதாகவும், பைத்தியக்காரத்தனத்தைச் சேர்ந்ததாகவும், சித்தரித்துப் பேச, பண்டிதருக்குப் பதட்டம் இருக்கிறது! விந்தை பேசிடும், விந்தையான மனிதர்!

கூரை ஏறி, கோழிபிடிக்க முடியாத கோமாளி, வானத்தைக் கிழித்து, வைகுண்டம் காட்டுவேன் எனக் கூறினானாம்! தன் கண்ணில் இருக்கும் தூணை எடுக்கத் தெரியாத மேதாவி, மற்றவர் கண்ணில் இருக்கிற துரும்பை எடுக்க உபாயம் கூறினானாம்! இவ்வாறுதான் இருக்கிறது பண்டிதர் ஜவகரின், முரண்பட்டும் பேச்சும், செயலும்! இந்த முரண்பாடு, பண்டிதருக்குப் பதவிநாதன் அருள்!

## 'உபயோகமற்ற உடன்பாடு!'

### எகிப்து பிரதமர் எச்சரிக்கை

"இடையிலுள்ள அரபு நாடுகள் துருக்கி - பாக் உடன்பாட்டில் சேராததால், அது உபயோகமற்றதாகும்," என்று எகிப்து பிரதமர் நாசர் கூறியுள்ளார்.

"பிற நாட்டினர் நிர்ப்பந்தம் எவ்வளவு கடுமையாக இருந்தாலும், ஆங்கிலோ—எகிப்து தகராறு தீர்க்கப்படும் வரையில், இத்தகைய உடன்பாடுகள் போன்றவற்றில் அரபு நாடுகள் சேராது" என்று அவர் குறிப்பிட்டார்.

"தன்னுடைய கோரிக்கைகளை மதிக்காத எந்த நாட்டோடும் எகிப்து நிச்சயமாக ஒத்துழைக்காது; நடுநிலைமைப் பற்றியும் பேசிப் பயனில்லை," என்று அவர் எச்சரித்தார்.

## ரயில்வேயில் மூன்றும் வகுப்பு உத்தியோகம்

—o—

### 2 லட்சம் விண்ணப்பங்கள்

புதுடில்லி, ஏப். 21—

"கல்கத்தாவில் உள்ள ரயில்வே சர்வீஸ் கமிஷனுக்கு, 1952—53-ம் ஆண்டில், மூன்றாவது வகுப்பு உத்தியோகங்களுக்காக மொத்தம் 1,39,391 மனுக்கள் அனுப்பப்பட்டிருந்தன; இந்த உத்தியோகங்களுக்காக மொத்தம் 9 248 பேர்களுக்கு பேட்டி கொடுக்கப்பட்டது; அவர்களில் மொத்தம் 5,621 பேர் வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்."

"1953—54-ம், ஆண்டில் (1954 மார்ச் 20-ந் தேதிவரை) இந்த உத்தியோகங்களுக்காக மொத்தம் 2,12,857 மனுக்கள் கிடைக்கப்பெற்றன; மொத்தம் 11,077 பேர்களுக்குப் பேட்டி கொடுக்கப்பட்டது; இவர்களில் மொத்தம் 6,080 பேர் வேலைக்குத் தெரிந்தெடுக்கப்பட்டனர்." என்று ரயில்வே போக்குவரத்து உதவி மந்திரி மக்கள் சபையில் அறிவித்தார்.

## பாக். பிரதமர் பாய்ச்சல்!

—o—

### இந்தியா — பாக். உறவு அசாத்தியமாம்!

யுத்தத்தின் கோர விளைவை உணர்கிறார்!

கராச்சி, ஏப். 20—

"இந்தியா — பாகிஸ்தானுக்கிடையே போர் மூண்டால் இரு நாடுகளும் படுநாசம் அடைந்துவிடுமென்பதை நாம் நன்குணர்ந்துள்ளோம்,'

—என்று, பாக். பிரதம மந்திரி முகமது அலி, 'இந்தியா, பாகிஸ்தானில் எந்நாட்டுடன் காஷ்மீர் இணைய வேண்டும் என்பது குறித்து விவாதிக்க வேண்டும்,' என்ற பிரேரணையைக் கொண்டு வந்த பார்லிமெண்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"காஷ்மீர் தகராறு தீர்க்கப்படாத வகையில், இந்தியா—பாகிஸ்தான் இடையே நட்புறவுக்கு இடமே இல்லை"யென்று அவர் வற்புறுத்தினார்.

"ஆசியாவில் சமுகமான சூழ்நிலை நிலவ, இந்தியா — பாகிஸ்தானிடையே சமாதானமும், நேச உறவும் அத்தியாவசியம்; ஆனால், அகதிகள், கால்வாய் தண்ணீர் விநியோகம், காஷ்மீர் போன்ற பிரச்னைகள் திருப்திகரமாகத் தீராத வரையில், இது இயலாததாகும்," என்றார் அவர்!

## உங்களுக்குத் தெரியுமா?

★

**கேள்விகள் :**

1 கிராமங்களில், சமுதாய அபிவிருத்தித் திட்ட வேலைகளில் உதவி அளித்துவரும் மக்கள் ஸ்தாபனங்களின் பெயர் என்ன?

(அ) விகாச மண்டல்கள்
(ஆ) அஞ்சல் சமிதிகள்
(இ) கிராம சேவக் சங்கங்கள்

2 கீழ்க்கண்ட பாசன-மின்சாரத் திட்டங்களில் எந்தெந்தத் திட்டங்கள் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன?

(அ) மச்குண்ட் ஜல-மின்சாரத் திட்டம் (ஒரிசா—ஆந்திரா)
(ஆ) சம்பல் அணைத் திட்டம் (மத்தியபாரத் — ராஜஸ்தான்)
(இ) கிருஷ்ணா அணைத் திட்டம் (சென்னை — ஹைதராபாத்)

3. ஐந்து ஆண்டுத் திட்டத்தில் பிற்பட்ட வகுப்புகளுக்கென்று எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது?

(அ) 13 கோடி ரூபாய்
(ஆ) 37 கோடி ரூபாய்
(இ) 41 கோடி ரூபாய்

4. தேசிய பௌதீக ஆராய்ச்சிக் கூடம் எந்த இடத்தில் இருக்கிறது?

(அ) டில்லியில்
(ஆ) சென்னையில்
(இ) ஜாம்ஷெட்பூரில்

5. சமுதாய அபிவிருத்தித் திட்டத்தில, எத்தனை கிராமங்கள் கொண்டது ஒரு கிராமத் தொகுதியாகும்?

(அ) சுமார் 100 கிராமங்கள்
(ஆ) சுமார் 150 கிராமங்கள்
(இ) சுமார் 200 கிராமங்கள்

**விடைகள் :**

1. மூன்று விடைகளும் சரி (இவை முறையே மத்திய பிரதேசத்திலும், ஒரிஸாவிலும், சென்னையிலும் வழங்கப்பட்டு வருகின்றன; 2. (அ), (ஆ); 3. (இ); 4. (அ); 5. (அ).

## இந்தியாவில் வைத்திய வசதி

—:o:—

### மேனாட்டு முறையில் அபிவிருத்தி

புதுடில்லி, ஏப். 21—

"நவீன விஞ்ஞான முறையை அடிப்படையாகக் கொண்டே இந்நாட்டில் வைத்திய வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனர்; ஆயுர்வேதம் யூனானி முறைகளையும் விஞ்ஞான ரீதியில் ஆராய வசதிகள் அளிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது," என்று, இந்திய சுகாதார மந்திரி இந்திய மேல் சபையில் அறிவித்தார்.

## காய்கறிகளுக்கு விற்பனை வரி விலக்கு

### ரூ 10 லட்சம் நஷ்டமேற்படும்?

சென்னை, ஏப். 20—

பச்சை காய்கறிகள், பழங்கள், பூ முதலியவைகளுக்கு வரிவிலக்கு கொடுத்திருப்பதால் சென்னை சர்க்காருக்கு ரூ 10 லட்சம் நஷ்டம் ஏற்படுமென்றும், வரி விலக்குப் பொருள்களில் முட்டையும் உண்டு என்றும், ரெவின்யூ மந்திரி அறிவித்துள்ளார்.

இந்த விலக்கு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து வருகிறது; ஆனால் சில வியாபாரிகளிடமிருந்து வரி வசூலிக்க அதிகாரிகள் கோட்டீஸ் கொடுத்திருக்கின்றனர். இதுபற்றிய புகாரை கவனிப்பதாக மந்திரி கூறினார்.

# செய்திச் சுருள்

★

## சௌந்திரபாண்டியனூர் பகுத்தறிவு மன்றம்

தாராவி (பம்பாய்) ஏப். 20—

18—4—54 மாலை 6 மணிக்கு மன்ற பணி மனையில் தோழர் மா. இரா. குறள்தாசன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, பணி மனை பொறுப்பாளர்களாக தோழர்கள் மு. செல்லத்துரை, பி சாமிநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; 29—4—54ல், பணி மனை திறப்பு விழா, "பாண்டியன்" கையெழுத்து ஏடு திறப்பு விழா ஆகியவைகளை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## சிந்தனைப் படிப்பகம்

18—4—54ல் படிப்பகத்தின் பொதுக் குழுக் கூட்டம் தோழர் திருமணி தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் என். ஜி. ஆறுமுகம், வி. கே. மறைமணி, என் மணியம், ஜி ராஜையன், ஆர். கே நாகராசன் ஆகியவர்கள் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

## உயர்நிலை துவக்கப்பள்ளி ஆண்டு விழா

புதுப்பேட்டை (தெ. ஆ) காட்டாண்மைக் கழக உயர் நிலைத் துவக்கப் பள்ளி ஆண்டு விழா 16—4—54 மாலை 5-க்கு திரு கே. எல. சுப்பையா பி. ஏ., பி. டி., அவர்கள் தலைமையில் கொண்டாடப் பெற்றது. தோழர் மா. அரங்கநாதன் 'இளங்கோவும் சிலப்பதிகாரமும்' என்பது குறித்தும், தோழர் க. அன்பழகன் எம். ஏ., 'மொழியும், மக்களும்' என்னும் பொருள் குறித்தும் விரிவுரையாற்றினார்கள். மாணவர்கள் கலையாட்டங்கள் நடத்தினர்; பரிசுகள் வழங்கப்பட்டன.

## தெ. ப. இரயில்வேமென் யூனியன்— திருவண்ணாமலை கிளை

பொன்மலை, ஏப் 20—

18—4—54 மாலை 3 மணியளவில் பொதுக் குழுக் கூட்டம் தோழர் எம். அய்யாசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் எஸ். இராகவானந்தம் பேசினார்; தோழர் குப்புசாமி ஆண்டறிக்கை வாசித்தார்; வரவு—செலவு ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர், நிர்வாகிகள்: தேர்ந்தெடுக்கப்பட்டனர்: தலைவர்: எம். அய்யாசாமி; துணைத் தலைவர்: டி. எஸ். வீராசாமி; செயலாளர்: சி. குப்புசாமி; துணைச் செயலாளர்கள்: அரைபாண்டியன், மாரிமுத்து; பொருளாளர்: ஜி. கிருட்டினசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: இராமலிங்கம், தியாகராசன், சாரங்கராமன், இராமசாமி, கோபால், கோவிந்தசாமி முதலியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## சென்னை மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளன செயற்குழுக் கூட்டம்

18—4—54 காலை 9 மணியளவில் திரு. கே. பி. சாமுண்டீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வரவு—செலவு கணக்கு சரி பார்க்கப்பட்டதுடன், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— மீனம்பாள் சிவராஜ் தலைவர்; கே. பி சாமுண்டீஸ்வரன் துணைத் தலைவர்; பவழை ஜெயராமன் பொதுச் செயலாளர்; ஏ. எஸ். தம்பிக்கண்ணு துணைச் செயலாளர்; பி. ஜி எஸ். மணியர் நிதிக் காப்பாளர்; கே. அன்புச்செல்வன் கணக்குப் பரிசோதகர்,

## சென்னை ஓட்டல் தொழிலாளர் சங்கம்

8—4—54 இரவு, சங்கக் கட்டிடத்தில், 10-வது மாநாட்டின் வரவேற்புக் கமிட்டி கூட்டம் தோழர் வி. ஜி. ராமசாமி தலைமையில் நடைபெற்றபோது, மாநாட்டுத் தலைவராக கே. எஸ். ஷெட்டி, திறப்பாளராக கே. டி. கே. தங்கமணி, கொடி ஏற்றுபவராக கே. பி. கோபாலன் எம். எல். ஏ., ஆகியவர்களும், அன்று மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்தில், சொற்பொழிவாற்ற தோழர் பி. ராமமூர்த்தி, டி. என். ராமானுஜம் ஆகியவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## திண்டுக்கல் திரு. வி. க. இளைஞர் மன்றம்

மேட்டுப்பட்டியிலுள்ள மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் தோழர் துரைராஜ் தலைமையில் நடைபெற்றபோது, ஆதரவளித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## தருவைக்குளம் தொழிலாளர் சங்க பொதுக் கூட்டம்

தூத்துக்குடி, ஏப். 20—

18—4—54 இரவு 8-30 மணியளவில் தோழர் வே. ஏசுதாசன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தொழிலாளர்களின் குறைகளைப்பற்றி தோழர்கள் நவமணி, டைனீஸ், வெ. அருணசலம் ஆகியோர் பேசினர்.

## திருமணம்

★

19—4—54 காலை 9 மணியளவில் சேலம் செவ்வாய்பேட்டை, தேவாங்கபுரம் புதுத் தெருவில் தோழர் சுப்பிரமணி—தோழியர் சரோசா திருமணவிழா தோழர் ஏ. சித்தையப்பன் தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர்கள் கே. ஏ. நடராசன், வி. சிவப்பிரகாசம் சொற்பொழிவாற்றினர். திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்- நன்றியுடையது—பொறுப்பாளர்.

## இரங்கல் கூட்டம்

18—4—54 காலை 10 மணியளவில், குடிசை 17—வது வட்ட தி மு கிளைக் கழகச் சார்பில், செயலாளர் தலைமையில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில், கழக உறுப்பினர் என். மாரிமுத்து இறந்ததை வெய்திபமைக்கு வருந்தியும், அவர்தம் குடும்பத்தாருக்கு அனுதாபமும் தெரிவிக்கப்பட்டது.

## மறைவு

தாயில்பட்டி தி. மு கழகத் தோழர் சுப்பையா 19-4-54-ல், இயற்கை வெய்தியதை வருந்ததுடன் அறிவிப்பதுடன், அவர்தம் குடும்பத்தினருக்கு, தாயில்பட்டி தி. மு. கழகம் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

## அணுசக்தியால் இயங்கும் எக்ஸ்ரே மெஷின்

சிக்காகோ, ஏப். 21—

விலையும் எடையும் மிகவும் குறைந்த ஒரு எக்ஸ்ரே மெஷினை அமெரிக்க அணு சக்திக் கமிஷனைச் சேர்ந்த ஆர்கான் தேசிய ஆராய்ச்சி சாலை தயாரித்துள்ளது.

10 பவுண்டுக்கும் குறைவான எடையுள்ள இம்மெஷின் 1 லட்சம் வால்ட்டுகள் சக்தியுள்ள எக்ஸ்ரே மெஷினின் சக்திக்குச் சமமாகும் என அந்த ஆராய்ச்சி சாலையைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## தோழர் சங்கரன் நினைவுக் கல் நாட்டு விழா

திருச்சி, ஏப். 19—

திருச்சி நகரசபை உறுப்பினரும், சீர்திருத்தவாதியும், தி. மு. கழக பிரமுகருமான காலஞ்சென்ற தோழர் சங்கரன் நினைவுக்கல் நாட்டு விழா திருச்சி நகரசபைத் தலைவர் ராமசாமி தேவர் தலைமையில் நடைபெற்றது. தி. மு கழக பொதுச் செயலாளர் அண்ணாதுரை நினைவுக்கல் நாட்டி விரிவுரையாற்றினார்.

தோழர்கள் ஈ வெ. கி. சம்பத், பி. ஆர். ராமசாமி, அ பொன்னம்பலனார், சி. பி. சிற்றரசு, தியாகராஜ பாகவதர், திருச்சி நகரசபை கமிஷனர் கி. ராமலிங்கம், மஞ்சளாவாய், எஸ். வி. லிங்கம், வை. சு. சண்முகம், கவுன்சிலர் சுப்ரமணியம், கே. கே. நீலமேகம் ஆகியோர் காலஞ்சென்ற சங்கரன் அவர்களை பாராட்டிப் பேசினர். இறுதியில் தோழர் சங்கரன் அவர்களுக்குப் பிடித்தமான பாட்டை எம். கே. தியாகராஜ பாகவதர் பாடினார். நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

## ஜெயங்கொண்டம் கூட்டுறவு இயக்கப் பொன் விழா

திருச்சி மாவட்டம் ஜெயங்கொண்டம் கூட்டுறவு இயக்கப் பொன்விழா நிகழ்ச்சி 19-4-54 இரவு 7-30 மணிக்கு திரு. அண்ணாத்திரி செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கொடியேற்று விழாவுக்குப் பிறகு, தலைவர் முன்னுரை கூறினார்.

தோழர்கள் அ. பொன்னம்பலனார், தி. மு. கழக பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை ஆகியவர்கள் கூட்டுறவு இயக்கம் ஐம்பது ஆண்டு காலமாக மக்களுக்குச் செய்த நற்பணிகளைப் பற்றி விரிவுரையாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றி கூறுதலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

## சென்னையில் விவசாய நிலங்கள்

சர்க்கார் தரும் புள்ளி விவரங்கள்

புதுடில்லி, ஏப் 18—

"ஆந்திரா, சென்னை, மைசூர் விவசாய புள்ளி விவரங்கள்," என்ற தலைப்பில் புள்ளி விவர டைரக்டர் 1953 அக்டோபர் 1-ந் தேதி வெளியிட்ட பிரசுரத்தில் சென்னையின் 1947—48 முதல் 1951—52 வரை 5 ஆண்டுகள் பற்றிய புள்ளி விவரங்கள் கீழ்க்கண்டபடி உள்ளன:—

சென்னை மாநில விஸ்தீரணம் —3,86,00,000 ஏக்கர்.

மக்கள் தொகை—3,57 00,000

காடுகள் விஸ்தீரணம் — 60,00,000 ஏக்கர்.

காடுகள் பெரும்பாலும், கோயம்புத்தூர், சேலம், வட ஆற்காடு, மலபார், தென்கன்னடம், மதுரை ஆகிய மாவட்டங்களில் உள்ளன. இது மொத்த விஸ்தீரணத்தில் 16 சத விகிதம். சாகுபடி நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 1,49,00,000 ஏக்கர் (40 சத விகிதம்); இதில் 80 சத விகிதம் நிலங்கள் — கோயம்புத்தூர், மலபார், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்ஆற்காடு, மதுரை, வடஆற்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ளன.

இரு போக நிலங்களின் விஸ்தீரணம் 25,00,000 ஏக்கர். சாகுபடி செய்யப்படும் நிலங்களில் 60 சத விகிதத்தில் உணவுப் பொருள்கள் பயிராகின்றன; 15 சத விகித நிலங்களில் பருத்தி விளைகின்றன.

சென்னை மாநிலத்தின் முக்கிய வர்த்தகப் பொருள்கள் பருத்தி, தேயிலை, காப்பி, மிளகு ஆகியவையாகும்.

நெல், சோளம், ராகி, பார்லி முதலிய தானியங்கள் அதிகம் உற்பத்தி செய்யப்படுகின்றன.

50 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உள்ளது. ஏரிகள், வாய்க்கால்கள், கிணறுகள் ஆகியவை முக்கிய பாசன வசதிகளாகும்.

ஆந்திராவை விட சென்னையில் அதிகக் கால்நடைகள் உள்ளன.

# கழகச் செய்திகள்

★

## கானல்காடு தி. மு. கழக துவக்க விழா

மதுரை ஜில்லா கொடைக்கானல் தாலுகா, காமனூர் கிராமத்தைச் சேர்ந்த கானல் காட்டில் 28-2-54 மாலை 6 மணிக்கு ஊர்வலமும், 6-30 மணிக்கு பொதுக்கூட்டமும், கொடியேற்று விழாவும் நடைபெற்றது. தோழர் டி. என். எஸ். மீனாக்ஷி சுந்தரம் தலைமை தாங்கினார்; அண்ணா படத்தை தோழர் எஸ். வீரையா, பாண்டியனூர் படத்தை தோழர் ஆர். அழகர்சாமியும் திறந்து வைத்தனர். தோழர் கே. மார்க்கசகாயம் கொடியேற்றுவிழா வாற்றினார்.

நிர்வாக உறுப்பினர்கள்:— செயலாளர்: ஆர். வேல்சாமி; துணைச் செயலாளர்: பி பழனிச்சாமி; பொருளாளர்: பி. ரெங்கசாமி; விளம்பர உறுப்பினர்: ஆர். பி. ஆறுமுகம்; மாவட்டத் தலைவர்: கே. மொக்கையன்; நிர்வாக உறுப்பினர்கள்: தோழர்கள் ஐ. வேல் சாமி, பி. கரியமான், வி. ராசு, எம். பழனிச்சாமி, தி. முக்கன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## கடலூர் ஓ. டி. தி. மு. க. வட்டக்கிளை அமைப்பு

11—4—54 மாலை 4 மணிக்கு கடலூர் பழையநகர் 2-வது வட்டக் கிளை தி மு. கழகம் அமைப்புக் கூட்டம் அண்ணா அன்பு நிலையத்தில் தோழர் எல. மாரிமுத்து தலைமையில் நடைபெற்றது. அதுபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ப. செமோறன்; துணைச் செயலாளர்: எஸ். மாரிமுத்து; பொருளாளர்: அ. வை. இராமச்சந்திரன்; மாவட்டப் பிரதிநிதி; எஸ். அஜீஸ்; செயற்குழு உறுப்பினர்கள்: மா. கோதண்டபாணி, ந. லட்சுமணன், அ. இராமகிருட்டிணன், வீ. சடகோபன், ஈ குத்தூஸ், பா. இராதாகிருட்டிணன், மு. குருசாமி, கோ. ரத்தினம், து. சீனுவாசன், மா. முனுசாமி, மு. பரமசிவம் தோழர்கள் வி வி. தனுஷ்கோடி, என். ஆர். சாமியப்பா, அருப்புக்கோட்டை முத்து, திருச்சி என். சங்கரன் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## தோரமங்களம் தி. மு. கழகம்

15—4—54 மாலை 5 மணிக்கு சலகண்டபுரம் தென்றல் நூற்பதிப்புக் கழகத்தில் உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. தோழர் எ. ஆண்டியப்பன் தலைமை வகித்தார்.

சேலத்தில் மே. 1, 2 தேதிகளில் நடைபெறவிருக்கும் மாநாடுகள் பற்றியும், கழக நடைமுறைகள் பற்றியும். தோழர் ப. கண்ணன் அவர்கள் பேசிய பின், செயலாளராக எ. ஆண்டியப்பன், துணைச் செயலாளராக என் அண்ணாமலை, மாவட்டப் பிரதிநிதியாக கே. என். கலைச்செல்வன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சேலம் மாநாட்டுப் பிரதிநிதிகளாக தோழர்கள் எ. ஆண்டியப்பன், கே. என். கலைச்செல்வனும் தொண்டர்களாக தோழர்கள் லைனர் அண்ணாமலை, சி. ஆசைத்தம்பியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## மாதுங்கா (பம்பாய்) தி. மு. கழகம்

18—4—54 மாலை 6-30 மணியளவில் தோழர் பொன். நிர. சபாபதி தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அதுபோது, நிறுவப்படவிருக்கும் நூலகத்திற்கு "மஜீத் நூலகம்" என பெயரிடுவதென்றும், திருச்சி தோழர் சங்கரன் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## ஆலந்தூர் தி. மு. கழகம்

18—4—54 காலை 10-30 மணியளவில் கழகக் கட்டிடத்தில், செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, கழக நிர்வாக உறுப்பினர் தோழர் ம. கன்னியப்பன் தான் கழகத்திலிருந்து விலகுவது பற்றி பத்திரிகையில் வெளியிட்ட அறிக்கையை மறுத்தும்: கழகத்தின் சட்ட திட்ட விதிகளுக்குப் புறம்பாக நடந்து கொண்டதால், அவரை ஆலந்தூர் தி. மு. கழகக் கிளையினின்றும் விலக்குவதென தீர்மானித்தும், தி. மு. கழக பொதுக் குழு தீர்மானங்களை வரவேற்றும், பிரெஞ்சிந்தியப் போராட்டத்தை ஆதரித்தும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கொலாபா தி. மு. கழகம்

பம்பாய், ஏப். 20—

7—4—54 இரவு 10 மணியளவில் மாதாந்திரக் கூட்டமும், 16—4—54ல் அனுதாபக் கூட்டமும் முறையே தோழர் எஸ். பி. பெருமாள், ஆர். ஜி ஜார்ஜ் ஆகியவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, கழகத்தின் ஆரம்ப முதல் மார்ச் இறுதி வரையுள்ள வரவு—செலவு கணக்குகள் ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், தாராவியில் நடைபெறும் நாடகம், பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவரும் தோழர் சி. பி சிற்றரசு அவர்களுக்கு கழகச் சார்பில், தேனீர் விருந்து அளிப்பதென்றும், தீர்மானிக்கப்பட்டதுடன், நிர்வாகக் குழு உறுப்பினர் தோழர் எம். கே. ராஜு அவர்கள் தாயார் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## ஆவட்டி தி. மு. கழகம்

இவ்வூரில், தி. மு. கழகம் அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: ம. தங்கராசன்; துணைச் செயலாளர்: க. கிருட்டிணன்; பொருளாளர்: அ சின்னசாமி; மாவட்டப் பிரதிநிதி: வெ. கோபால்; கமிட்டி உறுப்பினர்கள்: மு. பெரியசாமி, பூ. அய்யாச்சாமி, மா. கலியபெருமாள், அ. சுப்பு, வ. கோவிந்தசாமி, பெ. கருப்பையன், மு. அழகப்பன், க. முத்துசாமி, க தங்கவேலன்.

3—5—53ல், தோழர் என். என் இளங்கோ அவர்களால் கழகத் துவக்க விழா நடைபெறும்.

## இந்திய செலாவணி

கணக்கிடுவதற்குப் புதுக் கருவி

வாஷிங்டன், ஏப். 22—

இந்தியாவில் உபயோகத்தில் இருந்துவரும் செலாவணியில் கூட்டுவதற்குப் பயன்படும் ஒரு புதிய கருவியை நியூயார்க்கைச் சேர்ந்த ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

ஸ்டர்லிங் நாணய முறையில் இயங்கும் மெஷினிலிருந்து தாம் பெற்றுள்ள அனுபவத்தின் மூலம் இதனைக் கண்டுபிடித்துள்ளதாகவும், பைசாக்களையும் அணாக்களையும் குறிப்பிட மெஷினில் பிரத்தியேக இடங்கள் இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

# 'சரித்திர கால மாறுதல்கள் பிரெஞ்சுப் பகுதியையும் பாதித்தே தீரும்'

## 'தவிர்க்க முடியாத நிலைமை' என இந்திய சர்க்கார் அறிக்கை

### "வியப்பு" தெரிவித்து பிரெஞ்சு சர்க்கார் பதில்

புதுடில்லி, ஏப். 21—

மார்ச் 22-ந் தேதியிலிருந்து ஏப்ரல் 9-ந் தேதி வரை பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் சமீபத்தில் ஏற்பட்டுள்ள நிலவரங்களைப் பற்றி இந்திய, பிரெஞ்சு சர்க்கார்களுக்கிடையே நடந்த கடிதப் போக்குவரத்துகளை கொண்ட ஒரு வெள்ளை அறிக்கையை உதவி அயல் நாட்டு மந்திரி மக்கள் சபையில் சமர்ப்பித்தார். இந்த அறிக்கையில் இந்திய சர்க்கார் அனுப்பிய இரண்டு கடிதங்களும், பிரெஞ்சு சர்க்கார் அனுப்பிய இரு கடிதங்களின் விவரமும் அடங்கியுள்ளன.

பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் வாழும் மக்கள்மீது பொருளாதார நிர்ப்பந்தம் கொண்டுவரப்பட்டதென்ற பிரெஞ்சு சர்க்காரின் குற்றச்சாட்டை தவறானதென்று இந்திய சர்க்கார் நிராகரித்துள்ளது.

"சில சரித்திர பிரசித்தி பெற்ற மாறுதல்கள் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. அதேபோன்ற மாறுதல்கள் பிரெஞ்சுப் பகுதிகளையும் பாதித்து அதே முடிவுக்கு கொண்டு விடுவது தவிர்க்க முடியாததாகும்,'

—என்று இந்திய சர்க்கார் ஏப்ரல் 9-ந் தேதி ஒரு கடிதத்தின் மூலம் பிரான்சுக்கு தெரிவித்திருக்கிறது.

"கள்ளத்தனமாக சரக்குகளைக் கடத்துவதையும், இதர சில நடவடிக்கைகளைத் தடுக்கவும் இந்திய சர்க்கார் செய்துள்ள ஏற்பாடுகள் போதுமானவை என்று கூற முடியாது. இந்த நடவடிக்கைகள் தங்களுடைய நியாயமான உரிமைகளைப் பாதுகாக்கவே எடுத்துக் கொள்ளப்படுகின்றன என்றாலும், அத்தியாவசியமான தேவைப் பொருள்கள் இந்தியாவிலிருந்து பிரெஞ்சுப் பகுதிகளுக்கு தொடர்ந்து அனுப்பப்படுகின்றன; ஆனால், இப்பொருள்களை விற்பதிலோ அல்லது விநியோகிப்பதிலோ அரசியல் காரணங்களின் அடிப்படையில் பிரெஞ்சிந்திய சர்க்கார் பாரபட்சம் காட்டுமானால், இந்தச் சரக்குகளை அனுப்புவது புனராலோசிக்கப்படுமென்று இந்திய சர்க்கார் தெளிவாக்கியுள்ளது"

உடனே பிரெஞ்சு நிர்வாகம் மாற்றப்பட வேண்டுமென்றும், சட்ட பூர்வப் பிரச்னைகள் தீர்க்கப்படும்வரையில் பிரெஞ்சு ஆதிபத்தியம் வேண்டுமானால் நீடிக்கலாமென்ற யோசனையை இந்திய சர்க்கார் மீண்டும் கூறியுள்ளது

"இந்த யோசனையை இரு சர்க்கார்களும் விரும்பும் கண்ணியம் தகராறை விரைவில் தீர்த்துக்கொள்ள உதவுமென்று இந்திய சர்க்கார் நம்புகிறது. இப்பிரச்னையை சுமூகமாகவும், சிநேக பாவத்துடனும் தீர்த்துக் கொண்டால் இரு நாடுகளுக்குமிடையே உள்ள உறவு பலப்பட உதவியாக இருக்கும்" என்றும் அக்கடிதம் கூறுகிறது.

பொது மக்கள் வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்ற 1948-ம் ஆண்டு ஒப்பந்தத்தால் இந்தியா கட்டுப்படுத்தப்படாததென்றும், காரணம், பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் இருந்த நிலைமையே என்றும் கடிதம் விளக்குகிறது.

இந்தியாவுடன் இணையவேண்டுமென்ற பொது மக்களின் கோரிக்கையை பிரெஞ்சு சர்க்கார் அனுதாபத்துடன் ஆலோசிக்குமென்று இந்திய சர்க்கார் நம்பியது அதையொட்டி இந்திய சர்க்கார் கூறிய யோசனைப்படி முடிவு தேடலாமென்று அறிவித்தது. ஆனால் பிரெஞ்சு சர்க்கார் இந்த யோசனையை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை அதுமட்டுமல்ல; பிரெஞ்சிந்தியாவில் நடக்கும் ஸ்தல சர்க்கார் பெருவாரி மக்கள் முன் ஆதரவு பெற்றுள்ள இவ்வியக்கத்தை அனுதாபத்தோடு கவனிப்பதைவிட்டு நிலைமையை முற்றவைக்கும்வகையில் நடந்துகொண்டது குறித்து கவலை தெரிவிக்கிறது. இது போன்ற நிலைமையில் இந்தியாவிலும் நெருக்கடி வளரக் கூடும்.

பொதுஜன வாக்கெடுப்பு அவசியமில்லையென்று வலியுறுத்துகையில் மக்களின் விருப்பம் அவர்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளால் தெளிவுபடுத்தப்பட்டதென்றும், பிரெஞ்சிந்தியாவில் உள்ள நிலைமையில் அங்கே சுயேச்சையான வாக்கெடுப்பு சாத்தியமில்லையென்று எல்லா அரசியல் கட்சிகளும் அறிவித்துள்ளனவென்றும் கடிதம் கூறுகிறது

முடிவில் தாங்கள் கூறியுள்ள யோசனைப்படி பிரெஞ்சு சர்க்காருடன் பேச்சு நடத்த இந்திய சர்க்கார் தயார் என்றும் கடிதம் கூறுகிறது."

### பிரெஞ்சு சர்க்கார் பதில்

1954 மார்ச் 25-ந் தேதி பிரெஞ்சு சர்க்கார் ஒரு பதிலை அனுப்பியது.

பிரெஞ்சிந்தியாவில் மக்கள் பயமுறுத்தப்படுவதாக இந்திய சர்க்கார் குறிப்பிட்டிருந்தது பற்றி அப்பதிலில் "வியப்பு" தெரிவிக்கப்பட்டிருந்தது

பிரெஞ்சிந்திய மக்கள் சமூக வாழ்க்கை நடத்த முடியாமல் இந்திய சர்க்கார் பொருளாதார நிர்ப்பந்தம் பிரயோகிதது வருகிறது என்றும், எது எப்படியிருப்பினும் அங்குள்ள மக்கள் தங்களுடைய கருத்துக்களை வெளியிட சந்தர்ப்பமளிக்க பிரெஞ்சு சர்க்கார் ஆவலாக இருப்பதாகவும், பரஸ்பரம் கலந்து பேசுவதற்குத் தகுதியான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு உடனடியாக பேச்சு நடத்த பிரெஞ்சு சர்க்கார் தயாராயிருப்பதாகவும், சாத்தியமானால் ஒருசர்வதேச மேற்பார்வையின் கீழ் அதை நடத்தலாம் என்றும் அக்குறிப்பு கூறியது.

---

### மேலூர் (மதுரை) தி. மு. மாணவர் கழக முதலாவது ஆண்டுவிழா

24—4—54 சனி மாலை 6 மணிக்கு, மாணவர் கழக முதலாவது ஆண்டு விழா, முனியாண்டிகோவில் திடலில் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் க. அன்பழகன், மலைச்சாமி, அழகு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

### மதுரை இளைஞர் முற்போக்கு மன்ற ஆண்டு விழா

25—4—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு கொண்டாடப்பெறும். தோழர் க. அன்பழகன் அவர்கள் 'வடக்கும் தெற்கும்' என்னும் பொருள் பற்றிப் பேசுவார். மற்றும், தோழர்கள் கே. எஸ். சந்தானம், மு. இளமாறன் முதலியோரும் பேசுவர்.

### தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக

24—4—54 சனி இரவு 10 மணிக்கு, குன்றத்தூர் அழகிரி திடலில், தி. மு. கழகக் கட்டிட நிதிக்காக, தோழர் எம் ஜி ராமச்சந்திரன் அவர் தம் குழுவினர் நடிக்கும் 'இன்பக் கனவு' நாடகம் நடைபெறும்.

### தூண்டுவது குற்றம்!

சென்னை, ஏப். 22—

உண்ணாவிரதம், வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில், எந்தப் போலீஸ் உத்தியோகஸ்தரும் அதில் தாங்கள் ஈடுபடுவதோ, ஈடுபடுமாறு மற்றவர்களைத் தூண்டுவதோ கூடாதென்று போலீஸ் சபார்டினேட் நடத்தை விதிகளுக்கு சர்க்கார் ஒரு திருத்தம் வெளியிட்டுள்ளனர். இத்திருத்தத்தின் மூலம் தடை செய்யப்படும் நடவடிக்கைகளில் உண்ணாவிரதமும் சேரும்.

---

# 'முஸ்லீம் லீக்—இந்து மகா சபையைத் தடை செய்க!'

— (:) —

## 'கொள்ளை இலாபத்தைக் கட்டுப்படுத்தவும்'

### 'வடக்கு—தெற்கு ஒற்றுமைக்குப் பெங்களூரில் மக்கள் சபை கூட வேண்டும்'

புதுடில்லி, ஏப். 21—

மக்கள் சபையின் துணைத் தலைவராக உள்ள அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் இன்று முதன் முதலாக, வரவு-செலவு திட்ட விவாதத்தில் சாதாரண உறுப்பினராகப் பங்கு கொண்டார். பங்குகள் மீது தரப்படும் லாபத்தைக் கட்டுப்படுத்தி, உபரியாக இருக்கும் லாபத் தொகையை தொழில் முன்னேற்றத்திற்கு ஈடு செய்ய வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார்,

இந்து மகாசபையையும், முஸ்லிம் லீகையும் இயங்க விடாமல் தடை விதித்து, அரசியலில் புகுந்து குழப்பம் செய்யாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவித்தார்.

இம்பீரியல் பாங்கையும், இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளையும் தேசியமயமாக்க வேண்டுமெனவும் அவர் எடுத்துக்கூறினார்.

இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் மூலதனத்தைப் பறிமுதல் செய்ய அரசாங்கம் முன்வரவில்லையானாலும் இந்தியாவின் வெளி நாட்டார் பெறும் லாபத்தை நிர்ணயம் செய்ய வேண்டும் என திருமதி ரேணுகா சக்ரவர்த்தி குறிப்பிட்டார்.

வடக்கு—தெற்கு பகுதிகளிடையே ஒற்றுமை உணர்வை உருவாக்க மக்கள் சபைக் கூட்டத்தை பங்களூரிலாவது ஐதராபாத்திலாவது கூட்ட வேண்டுமென சென்னை காங்கிரஸ் உறுப்பினர் சுப்பிரமணியம் வலியுறுத்தினர்.

---

# 'மக்களிடமுள்ள குறைகள் அரசாங்கத்திலும் பிரதிபலிக்கின்றன'

### 'வாக்குகளைத் தக்கவருக்கு ஈந்தால்தான் நல்லாட்சி அமையும்'

சர்வோதயபுரி, ஏப் 21—

"அரசாங்கம் இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை என்ற முறையீடுகளை நான் அறியும்போழுது, தங்களுக்குத் தகுந்த அரசாங்கத்தையே தாங்கள் பெற்றிருக்கிறீர்கள் என மக்களிடம் நான் கூறுவேன்; மக்களிடம் நிலவியுள்ள குறைபாடுகள் அரசாங்கத்திலும் பிரதிபலிக்கின்றன; தங்களுடைய வாக்குரிமைகளைத் தக்க முறையில் மக்கள் பயன்படுத்துவார்களானால், அவர்களின் விருப்பத்திற்கு எதிராக நீண்ட நாளைக்கு நடந்து கொள்ள எந்த அரசாங்கமும் துணியாது."

—மேற்குறித்தவாறு குடியரசு தலைவர் ராஜேந்திர பிரசாத், அகில இந்திய சர்வோதய சங்கத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

தொழிலைப் பரவலாக அமைப்பது பற்றியும் அவர் தனது கருத்தை அறிவித்தார்.

தொழிலைப் பரவலாக அமைப்பது பிற்போக்கானது என இரண்டு மூன்று ஆண்டுகள் முன்வரை கருதிக் கொண்டிருந்தது அதை எதிர்த்தவர்களிடமிருந்து கூட ஆதரவு பெறும் நன்னிலையைப் பெற்றிருக்கிறது என்றும், அந்த ஏற்பாட்டிற்கு எல்லா ஆதரவும் இருந்தாக வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனரென்றும் அவர் குறிப்பிட்டார்.

### த. நா. கா. க. தற்காலிகத் தலைவர் நியமனம்

சென்னை, ஏப் 21—

இன்று நடைபெற்ற த. நா. கா. காரியக் கமிட்டிக் கூட்டத்தில், கே. காமராசர் தனது ராஜிநாமாவைச் சமர்ப்பித்தார்; அதை கமிட்டி ஏற்றுக்கொண்டதுடன், புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் துணைத் தலைவர் எல். எஸ். கரையாளர் தலைவர் பொறுப்பை நிர்வகிக்குமாறு கமிட்டி கட்டளையிட்டது.

த. நா. கா. காரியக் கமிட்டியின் காரியதரிசி பி. பரமேஸ்வரனும் தனது பதவியை ராஜிநாமா செய்தார்; புதிய காரியதரிசி தேர்ந்தெடுக்கப்படும் வரையில், அப்பொறுப்பை நிர்வகிக்குமாறு பி. ராமச்சந்திரனுக்கு கமிட்டி உத்திரவிட்டது.

---

ஐ. நா. கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனத்தில் (யுனெஸ்கோ) சோவியத் யூனியன் சேர்ந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

---

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# சேலம் மாவட்ட தி.மு.க. மாநாடுகள்

சேலம் V. மார்க்கெட்டில் அமைத்துள்ள பரசுராமன் பந்தலில் — வள்ளியப்பன் அரங்கில் நடைபெறும்.

| மே 1: சனிக்கிழமை | மே 2: ஞாயிற்றுக்கிழமை |
|---|---|
| **சமுதாய சீர்திருத்த மாநாடு** | **அரசியல் மாநாடு** |
| தலைவர்: தோழர் ப. உ. சண்முகம் | தலைவர்: தோழர் இரெ. இளம்வழுதி, M.A, B.L |
| துவக்குபவர்: தோழர் கோகுல கிருஷ்ணன், B.A., B.L. | துவக்குபவர்: மதுரை தோழர் எஸ். முத்து |

மற்றும் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், இயக்க முன்னணி வீரர்களும் கலந்துகொள்வார்கள்

★

இரு நாட்களிலும் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் 'காதல் ஜோதி,' 'ஓர் இரவு' நாடகங்கள் நடைபெறும்

கட்டணம்:—வரவேற்பாளர் ரூ. 5; பிரதிநிதி: ரூ. 3; ஆதரவாளர்: ரூ. 2; பார்வையாளர்: ரூ 1; பெண்கள்: அணா 8.

—வரவேற்புக் குழுவினர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, முத்து நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.,